# ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களால் பயங்கரவாதம் ஒருபோதும் நியாயப்படுத்தப்படவில்லை

---

இலண்டன் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் நடைபெற்ற 13 -வது தேசிய அமைதிக் கருத்தரங்கில் உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் ஆற்றிய சிறப்புரை

---



அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் கூறினார்கள்: ,

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் – அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத் துல்லாஹி வபரக்காத்துஹூ – அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உங்கள் அனைவர் மீதும் உண்டாகட்டுமாக!

எமது அழைப்பினை ஏற்று இந்த மாலை வேளையில் எங்களோடு இங்கு இணைந் திருக்கின்ற எமது சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியை முதலாவதாக இந்தத் தருணத்தில் கூறிக் கொள்கிறேன். தீவிரவாதக் குழுக்களின் அதிபயங்கர இழிவான செயல்களின் காரணத்தால் பரவியிருக்கும் இஸ்லாத்தின் மீதான அச்சம் அதிகரித் திருக்கின்ற ஒரு தருணத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறுவதால் உங்களின் வருகை சிறப்பாக குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

எடுத்துக்காட்டாக, கடந்த நவம்பர் மாதம், பாரிஸில் தீவிரவாதத் தாக்குதல்கள் நடைபெற்றதை உலகம் அச்சத்துடன் கண்டது. இது தவிர உலகின் பல்வேறு நாடுகளில் குறிப்பிட்ட கால இடைவெளியில் தற்கொலை குண்டு வெடிப்புகளும் தாக்குதல்களும் நடைபெற்றே வருகின்றன. பிரிட்டனைப் பொருத்தவரை, அதிமுக்கிய இடங்களையும் பொது இடங்ளையும் குறி வைத்து பிரிட்டனில் பெரிதும் பிரமிக்கத் தக்கதுமான தீவிரவாதத் தாக்குதல்களை நடத்த தாயிஷ் திட்டமிடுவதாகக் காவல்துறை உதவி ஆணையர் மிகச் சமீபத்தில் எச்சரித்திருந்தார்.

மேலும், கடந்த வருடத்தில் ஐரோப்பா வில் அகதிகளின் திடீர் வருகை ஏற்பட்டது.

**கடந்த வருடத்தில் ஐரோப்பாவில் அகதிகளின் திடீர் வருகை ஏற்பட்டது. இதனால் பலரது மனதில் ஓரளவு அச்சமும், உறுதியற்ற நிலையும், பதற்றமும் கூட ஏற்பட்டுள்ளது.**

இதனால் பலரது மனதில் ஓரளவு அச்சமும், உறுதியற்ற நிலையும், பதற்றமும் கூட ஏற்பட்டுள்ளது. இவை அனைத்தின் ஒளியில், உங்களின் வருகையும் முஸ்லிம் அல்லாதவர்களாக இருந்து கொண்டு ஒரு முஸ்லிம் ஜமாஅத்தால் நடத்தப்படும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முன்வந் திருப்பதும் நீங்கள் தைரியமும், சகிப்புத் தன்மையும், திறந்த மனப்பான்மையும் கொண்டவர்கள் என்பதை நிரூபிக்கின்றது.

எப்படி இருந்தபோதிலும், உண்மை இஸ்லாத்தைக் குறித்து எவரும் பயப்படத் தேவையில்லை என்பது தெளிவான உண்மையாகும். சிலர் இஸ்லாத்தை பயங்கரவாத மார்க்கம் என்றும் தற்கொலைத் தாக்குதல்களை அல்லது தீவிரவாதத்தின் பிற வடிவங்களை ஆதரிக்கின்றது என்றும் கருதினாலும் உண்மை அதுவல்ல. சமீபத் தில் ஒரு பிரபல ஆங்கிலப் பத்திரிகையாளர் ஒரு தேசிய பத்திரிகையில் Islamophobia (இஸ்லாத்தின் மீதான பயம்) அதிகரித்து வருவது தொடர்பாக எழுதியுள்ளார். தற்கொலை குண்டு வெடிப்புகள் குறித்து விரிவான ஆராய்ச்சியை அவர் மேற் கொண்டதாகவும் இஸ்லாம் 1300 ஆண்டு களுக்கு மேலாக இருந்து வந்தபோதிலும் இத்தகைய முதல் தாக்குதல் 1980 –களில் தான் நடந்ததாகவும் அவர் எழுதியுள்ளார்.

இஸ்லாம் இத்தகைய தாக்குதல்களை அனுமதித்தால் அல்லது ஆதரித்தால் இஸ்லாத்தின் ஆரம்பத்திலிருந்து அதன் வரலாறு முழுவதும் அவை நடைபெற்றிருக்க

**சமீபத்தில் ஒரு பிரபல ஆங்கில பத்திரிகையாளர் ஒரு தேசிய பத்திரிகையில் "Islamophobia" (இஸ்லாத்தின் மீதான பயம்) அதிகரித்து வருவது தொடர்பாக எழுதியுள்ளார். தற்கொலை குண்டு வெடிப்புகள் குறித்து விரிவான ஆராய்ச்சியை அவர் மேற்கொண்ட தாகவும் இஸ்லாம் 1300 ஆண்டு களுக்கு மேலாக இருந்து வந்த போதிலும் இத்தகைய முதல் தாக்குதல் 1980 –களில்தான் நடந்ததாகவும் அவர் எழுதியுள்ளார்**

வேண்டும் என்ற முடிவுக்கு அவர் வந்துள்ளார். அவரது கருத்து ஏற்கத்தக்கதும், சிறந்த முறையில் கூறப்பட்டதும் மட்டுமின்றி இத்தகைய தாக்குதல்கள் இஸ்லாத்தின் உண்மை மற்றும் சமாதான போதனைகளை விட்டும் தூரமான நவீனகால தீமைகளே என்பதையும் நிரூபிக்கின்றது. நிச்சயமாக இஸ்லாம் தற்கொலையை அதன் அனைத்து வகைகளிலும் தடை செய்கிறது. எனவே தற்கொலைத் தாக்குதல்களுக்கோ அல்லது வேறெந்த வழியிலான பயங்கரவாதத்திற்கோ எந்த நியாயமும் கற்பிக்க முடியாது.

இத்தகைய கொடிய செயல்கள் அப்பாவிப் பெண்களையும், குழந்தைகளை யும், பொதுமக்களில் பிற உறுப்பினர்களை யும் கொலை செய்யவும் காட்டுமிராண்டித் தனமாக வெட்டித் தள்ளவுமே காரணமாக அமைகின்றன. டெக்ஸாஸில் ஹோஸ்டன் நகரிலுள்ள ரைஸ் பல்கலைக்கழகத்தின் (Rice University) முனைவர் கான்ஸிடைன் என்பவர் தமது சமீபத்திய ஓர் ஆய்வுக் கட்டுரையில் பெயர் தாங்கி இஸ்லாமிய நாட்டில் (IS) கிறித்தவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளை தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் எழுத்துக் களிலிருந்து நியாயப்படுத்த முடியாது என்று தெளிவாகவே கூறுகின்றார். மேலும், நபி (ஸல்) அவர்களின் பார்வையில் ஒரு முஸ்லிம் சமூகம் என்பது பல மார்க்கங் களைக் கொண்டதாகவும், குடிமக்களின் உரிமைகளை வழங்குவதாகவுமே இருந்தது என்றும் அந்த ஆய்வுக் கட்டுரை கூறுகிறது.

எனவே, இத்தகைய செயல்கள் எல்லாம் இஸ்லாத்தின் போதனைகளுக்கு முற்றிலும் மாற்றமானவையே என்பதை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். இஸ்லாம் போரை அனுமதிக்கிறது என்றால் அது தற்காப்புப் போர் என்ற அளவில் மட்டும்தான். அப்போது உங்கள் மீது போர் திணிக்கப் படுகிறது. உதாரணமாக, திருக்குர்ஆன் அதிகாரம் 22 வசனம் 40 –ல் அல்லாஹ் கூறுகின்றான்: "எவர் மீது போர் வலுக் கட்டாயமாகத் திணிக்கப்பட்டுள்ளதோ அவர்களுக்கு போரிட அனுமதி வழங்கப் பட்டிருக்கின்றது."

எவர்கள் மீது அநீதியிழைக்கப் பட்டுள்ளதோ அவர்களுக்கு மார்க்கப் போர்களில் ஆதரவளிக்கவும் அல்லாஹ் ஆற்றல் பெற்றவனாவான் என்று வல்லமை மிக்க அல்லாஹ் அதே வசனத்தில் கூறுகிறான். இஸ்லாத்தின் ஆரம்பக் காலத்தில் நடைபெற்ற போர்கள் முறையான மார்க்கப் போர்களாக இருந்தன. உலகளாவிய மார்க்க சுதந்திரம் என்ற அடிப்படைத் தத்துவத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகவே அந்தப் போர்கள் நடத்தப்பட்டன. அவற்றில் சொற்ப எண்ணிக்கை கொண்ட ஆயுதமற்ற முஸ்லிம்கள் அதிக ஆயுத வசதிகளைப் பெற்றிருந்த பெரும் படைகளை எதிர்த்துப் போராடிய போதிலும், இந்த இலட்சியத்துடன் போரிடப்பட்ட மார்க்கப் போர்கள் முஸ்லிம் களை வெற்றி பெற வைத்தன என்பதை வரலாறு நிரூபிக்கின்றது.




**ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் 13 –வது தேசிய அமைதிக் கருத்தரங்கில் உரையாற்றுகிறார்கள்**

எனினும், நான் ஒரு முஸ்லிம் என்ற நிலையில், தற்காலத்தில் முஸ்லிம்கள் ஈடுபடுகின்ற போர்களை ஆராய்ந்து பார்க்கும்போது அவை மார்க்கப் போர்கள் அல்ல என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன். ஏனெனில், முதலாவதாக, முஸ்லிம் உலகில் நடைபெறும் பெரும்பாலான போர்கள் உள்நாட்டுப் போர்களாகவோ அல்லது அண்டை முஸ்லிம் நாடுகளுடன் நடைபெறும் போர்களாகவோதான் உள்ளன. இரண்டாவதாக, முஸ்லிம் அல்லாத நாடுகள் தலையிட்டாலும் அவை அதனை மார்க்கப் போராக என்றுமே அறிவித்ததில்லை என்பதுடன் அவை முஸ்லிம்களின் இரு தரப்பினருக்கும் உதவி செய்தும் வந்துள்ளன. எனவே, தற்காலத்தில் நடைபெறும் போர்கள் இஸ்லாத்திற்காகவோ அல்லது மார்க்கத்திற்காகவோ நடைபெறும் போர்கள் அல்ல. மாறாக, அவை பொருளதார அல்லது உலக அரசியல் சார்ந்த இலாபங்களுக்காக நடைபெறும் போர்களாக இருப்பதுடன் இஸ்லாத்தின் பெயருக்கு களங்கம் கற்பிப்பவையாகவே இருக்கின்றன.

எனவே நான் இதுவரை கூறியதிலிருந்து இஸ்லாத்தைக் குறித்து பயம் கொள்ளத் தேவையில்லை என்றும் அது பயங்கரவாத மார்க்கமோ அல்லது தற்கொலைத் தாக்குதல்களை அல்லது வரைமுறையற்ற வன்முறையை அனுமதிக்கின்ற மார்க்கமோ அல்ல என்றும் தெளிவாகிறது. இஸ்லாமோ –போபியாவிற்கு (Islamophobia) எந்தத் தேவையுமில்லை. ஏனெனில் அமைதி, சகிப்புத்தன்மை, பரஸ்பரம் மதிப்பளித்தல் ஆகியவையே இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் ஆகும். இஸ்லாத்தின் போதனைகள் மனிதப் பண்புகளை மேம்படுத்துவதுடன் அனைத்து மக்களின் மரியாதை, கண்ணியம், சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்கின்றன.

எனினும், சில பயங்கரவாதிகளும் பெயர் தாங்கி இஸ்லாமிய குழுக்களும்

**எனவே அல்லாஹ் அனைத்து மக்களையும் பரிபாலித்து காத்தோம்புபவனாகவும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனாகவும் இருக்கின்றபோது, அவன் மீது நம்பிக்கை கொண்டவர்கள் அவனது படைப்பினங்களை கருணையின்றி கொலை செய்வதையோ எவ்வகையிலும் அவற்றை கடுமையாக எதிர்ப்பதையோ அல்லது தீங்கிழைப்பதையோ எப்படி விரும்புவான்? இதற்கான பதில் இது சாத்தியமற்றது என்பதே ஆகும்.**

இஸ்லாத்தின் பெயரால் காட்டுமிராண்டித் தனத்தின் மிகக் கொடிய வடிவங்களைக் கட்டவிழ்த்து விடுகின்றன என்பதும் நாம் நன்கு அறிந்ததே. இருந்தபோதிலும் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட திருக்குர்ஆன் வசனம் இத்தகைய செயல்கள் எந்த வடிவத்திலும் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட வில்லை அல்லது நியாயப்படுத்தப்படவில்லை என்பதை தெளிவாக்கி விடுகிறது. மற்றொரு குறிப்பிடத்தக்க விஷயம் என்னவெனில், ஒரு முஸ்லிம் என்ற முறையில் என்னை போருக்கும் வன்முறைக்கும் இட்டுச் செல்லாமல் மனித குலத்தின் மீதான நேசத்தின் பக்கம் இட்டுச் செல்லக் கூடியது திருக்குர்ஆனின் முதலாவது அதிகாரத்தின் இரண்டாவது வசனமாகும். அது கூறுகின்றது: அல்லாஹ் அனைத்து உலகங் களையும் பரிபாலித்துக் காத்தோம்புபவன் ஆவான். மூன்றாவது வசனம் கூறுகின்றது. அவன் அளவற்ற அருளாளனும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனுமாவான்.

எனவே அல்லாஹ் அனைத்து மக்களை யும் பரிபாலித்து காத்தோம்புபவனாகவும், அளவற்ற அருளாளனாகவும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனுமாகவும் இருக்கின்றபோது, அவன் மீது நம்பிக்கை கொண்டவர்கள் அவனது படைப்பினங்களை கருணையின்றி கொலை செய்வதையோ எவ்வகையிலும் அவற்றை கடுமையாக எதிர்ப்பதையோ அல்லது தீங்கிழைப்பதையோ அவன் எப்படி விரும்புவான்? இதற்கான பதில் இது சாத்தியமற்றது என்பதேயாகும். எனினும் அல்லாஹ் கொடுமை, மனித நேயமற்ற தன்மை, அநீதி ஆகியவற்றை தடுப்பதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு நிச்சயம் அனுமதித்துள்ளான்.

கொடுமையிழைப்பவனின் கையைத் தடுத்து நிறுத்தவும் அனைத்து வகையான அநீதிகளையும் வரம்புமீறல்களையும் முடிவுக்குக் கொண்டு வரவும் ஒரு முஸ்லிம் முயற்சிக்க வேண்டும் என இஸ்லாம் கூறுகிறது. இஸ்லாத்தைப் பொருத்தவரை இதனை இரண்டு வழிகளில் நிறைவேற்றலாம். முதலாவதாக, பரஸ்பர பேச்சு வார்த்தை, சமரசம் மற்றும் உடன்படிக்கை ஆகியவற்றின் மூலமாக சமாதானம் ஏற்பட்டால் அது மிகவும் நல்லது. எனினும் இது சாத்தியமில்லாமல் போகும்போது மட்டுமே நிலையான அமைதியை நிலைநாட்டும் நோக்கத்துடன் அநீதி இழைப்பதை தடுப்பதற்காக பலவந்தத்தைப் பயன்படுத்தலாம்.

மார்க்கத்திற்கு அப்பால் ஒவ்வொரு சமுதாயத்திலும் நாட்டிலும் விதிகளும் சட்டங்களும் உள்ளன. அவை மீறப்பட்டால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள் பொதுவாக மேற்கொள்ளப்படுகின்றன. தண்டனை தராமல் அல்லது இலேசான தடைகள் மேற்கொள்வதன் மூலம் அல்லது கண்டிப்பதன் மூலம் சீர்திருத்தம் செய்வதற் கான வாய்ப்பு இருப்பின் அது நல்லது. ஆனால், அது சாத்தியமில்லை எனில், பரந்த சமுதாயத்தின் நலனைக் கருத்தில் கொண்டு மற்றவர்களைத் தடுக்கும் ஒரு




கருத்தரங்கின் சிறப்பு விருந்தினர்கள் இடமிருந்து வலம்: இலண்டனின் மேயர் வேட்பாளர் மற்றும் ரிச்மன்ட்பார்க் எம்பி சாக் கோல்ட்ஸ்மித்; விம்பிள்டன் நகரம் பயங்கரவாதத் தடுப்பு அமைச்சர் லார்டு தாரிக் அஹ்மது; அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் யூ.கே அமீர் ர.ஃ.பீக் ஹயாத் சாஹிப்; மிட்சேம், மார்டனின் எம்பி மற்றும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கான பார்லிமென்ட் குழுவின் தலைமை அதிகாரி சியோபன் மெக்டோனக்; ப்யூட்னியின் எம்பி மற்றும் சர்வதேச முன்னேற்றத்திற்கான தேசியச் செயலர் மாண்புமிகு ஜஸ்டின் கிரீனிஸ்

வழியாக கடுமையான தண்டனை விதிக்கப் படுகிறது.

மார்க்கத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, இஸ்லாத்தைப் பொருத்த வரை பழிவாங்கும் நடவடிக்கையாக அல்லாமல் கொடுமை மற்றும் துன்புறுத்தலை நிறுத்துவதற்கான வழியாகவும் உறுதியான சீர்திருத்தத்திற்கான ஒரு வழியாகவுமே தண்டனை அல்லது தடைகள் அனுமதிக்கப் பட்டுள்ளது. திருக்குர்ஆன் கூறுவது என்னவெனில், ஒரு நபரை அல்லது ஒரு குழுவினரை மன்னிப்பு மற்றும் கருணையின் மூலமாக சீர்திருத்த முடியும் எனில், பின்னர் இந்த வழியையே கடைப்பிடிக்க வேண்டும்.

எனினும், கருணையும் இரக்கமும் நல்ல விளைவை ஏற்படுத்தவில்லை எனில் பின்னர் சீர்திருத்தம் மற்றும் மேம்பாட்டிற்கான ஒரு வழியாக தண்டனை தரப்பட வேண்டும். எனவே, இஸ்லாத்தில் தண்டனை பற்றிய தத்துவம் மிகவும் ஞானம் நிறைந்ததும் தனித்தன்மை வாய்ந்ததுமாகும். அதன் நோக்கம் சீர்திருத்தம் செய்வதும், புனர்வாழ்வு வழங்குவதும் மேம்பாடு ஏற்படுத்துவதுமே ஆகும். மேலும் மக்களிடையே மனிதப் பண்புகளின் உயர் தகுதிகளை வளர்ப்பதற்கும் அவர்களைப் படைத்தவனின் பண்புகளை மேற்கொள்வதன் மூலம் மக்கள் ஒருவருக் கொருவர் மரியாதையும் அக்கறையும் கொள்வதற்காகவுமே ஆகும்.

எனவே எங்கு ஒரு தனி நபர் அல்லது ஒரு குழுவின் உரிமைகள் அநீதியாக பறிக்கப்படுகின்றதோ அங்கு குற்றத்திற்கு ஏற்ற தண்டனைகளை இஸ்லாம் அனுமதிக் கின்றது. எனினும் தடைகள் ஏதுமின்றி சீர்திருத்தம் செய்ய முடியும் எனில் அதற்கே முன்னுரிமை தரப்பட வேண்டும். எனவேதான் திருக்குர்ஆனில் அதிகாரம் 24 வசனம் 23 –ல் மன்னிப்பதும் இரக்கத்தை வெளிப்படுத்துவதுமே சிறந்தது என அல்லாஹ் கூறுகின்றான்.

அதைப் போன்று அதிகாரம் 3 வசனம் 135 –ல் எல்லாம் வல்ல இறைவன் இவ்வாறு கூறுகிறான்: எவர்கள் கோபத்தை அடக்கிக் கொண்டு மன்னித்து மறந்து விடுவார் களோ அவர்களை அல்லாஹ் நேசிக் கின்றான். மேலும் திருக்குர்ஆனில் பல இடங்களில் ஒருவர் முடிந்தவரை மன்னிக்க வேண்டும். ஏனெனில் இறுதியான நோக்கம் எப்போதும் நல்லொழுக்க சீர்திருத்தமே தவிர பழிவாங்குதல் அல்ல என்று கூறப்பட்டுள்ளது. நாடுகள் மற்றும் குழுக்களுக்கு இடையிலான மோதல்களைப் பொருத்தமட்டில் நீடித்த அமைதியை நிலைநாட்டுவதற்காக பொன்னான விதி ஒன்றை திருக்குர்ஆன் அதிகாரம் 49 வசனம் 10 –ல் அல்லாஹ் வழங்கியுள்ளான். எனவே, எங்கு ஒரு தனிநபர் அல்லது ஒரு

**அல்லாஹ் அனைத்து மக்களும் அமைதியுடன் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்றும் அனைத்து வகையான கொடுமை மற்றும் அநீதி யிலிருந்து விடுபட்டவர்களாகத் திகழ வேண்டும் என்றும் விரும்புகிறான். நம்பிக்கையைப் பொருத்தமட்டில் உலகளாவிய மார்க்க சுதந்திரம் மற்றும் மனச்சாட்சி சுதந்திரம் என்ற தத்துவத்தை இஸ்லாம் போற்றிப் பேணுகிறது.**

குழுவின் உரிமைகள் அநீதியாக பறிக்கப்படு கின்றதோ அங்கு குற்றத்திற்கு ஏற்ற தண்டனைகளை இஸ்லாம் அனுமதிக் கின்றது.

இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ளதாவது, நாடுகளுக்கிடையிலோ அல்லது குழுக்களுக் கிடையிலோ சண்டை ஏற்பட்டால் மூன்றாம் தரப்பினர் நடுவராக செயல்பட்டு பிரச்சனைக்கு ஒரு சமாதான தீர்வைக் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும். ஓர் உடன்பாடு ஏற்பட்டால் அனைத்து தரப்பினரும் நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். ஆனால் ஏதாவது ஒரு தரப்பினர் தீர்ப்பிற்கு முரண்பட்டு தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டால், பின்னர் பிற நாடுகளும் அல்லது குழுக்களும் ஒன்று சேர வேண்டும். தேவைப்பட்டால் தாக்குதல் தொடுப்பவரைத் தடுத்து நிறுத்த படைபலத்தைப் பயன்படுத்த வேண்டும். எனினும் தாக்குதல் தொடுக்கும் தரப்பு பின்வாங்கி சமாதானத்தை மேற்கொண்டால் அவர்களை நேர்மையற்ற முறையில் கட்டுப்படுத்தக் கூடாது. மாறாக ஒரு சுதந்திர நாடாகவும் ஒரு சுயேட்சையான சமுதாயமாகவும் அவர்கள் நீடித்திட அனுமதிக்க வேண்டும்.

எனவே, முழு மனிதகுலத்தின் பரிபாலிப்பவன் மற்றும் காத்தோம்புபவன் என்ற நிலையில், அல்லாஹ் அனைத்து மக்களும் அமைதியுடன் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்றும் அனைத்து வகையான கொடுமை மற்றும் அநீதியிலிருந்து விடுபட்டவர்களாகத் திகழ வேண்டும் என்றும் விரும்புகிறான். நம்பிக்கையைப் பொருத்தமட்டில் உலகளாவிய மார்க்க சுதந்திரம் மற்றும் மனச்சாட்சி சுதந்திரம் என்ற தத்துவத்தை இஸ்லாம் போற்றிப் பேணுகிறது. இஸ்லாத்தைப் பொருத்தவரை ஒவ்வொரு மனிதனுக்கும் நம்பிக்கை சுதந்திரத்திற்கான உரிமை மட்டுமல்ல தனது நம்பிக்கையை அமைதியான முறையில் பரப்புவதற்கும் உரிமை உள்ளது.

மார்க்கம் என்பது எப்பொழுதுமே மனம் சார்ந்த ஒன்றாகும். எனவே மார்க்கத் தில் கட்டாயத்தின் எந்த வடிவமும் இருக்கக் கூடாது. இஸ்லாம் ஒரு முழுமையான மார்க்கம் என்று அல்லாஹ் தீர்மானித் திருக்கும்போது எவருக்கும் எவரையும் வலுக்கட்டாயமாக இஸ்லாத்திற்கு மதமாற்றம் செய்வதற்கு உரிமை இல்லை. மார்க்கத்தைப் பின்பற்றுபவரோ மற்றவரோ எவரும் இஸ்லாத்தைத் தாராளமாக ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இதில் மையக் கருத்து என்னவெனில் ஒருவர் சுதந்திர மாகவும் தனது சொந்த விருப்பத்தின்படியும் தேர்வின்படியுமே இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறே ஒரு முஸ்லிம் இஸ்லாத்தை விட்டுவிட விரும்பினால், திருக்குர்ஆனின் போதனைகளின்படி அவருக்கோ அல்லது அவளுக்கோ அதற்கான உரிமை உண்டு.

இஸ்லாம் ஓர் உலகளாவிய மார்க்கம் என்றும் காலத்தைக் கடந்த போதனை என்றும் நாம் நம்புகின்ற அதே வேளையில் எவரும் இதனை விட்டு விட விரும்பினால்




கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள் கலீஃபா அவர்களின் உரையை செவியேற்கின்றனர்.

அது அவரது சொந்த முடிவும் விருப்பமும் ஆகும். அதிகாரம் 5 வசனம் 55 –ல் அல்லாஹ் கூறுகிறான்: ‘‘எவரும் விட்டு விட விரும்பினால் அவரை செல்ல விடுங்கள். அவன் அவர்களுக்குப் பதிலாக அவர்களை விடச் சிறந்த நேர்மையானவர்களைக் கொண்டு வருவான். எந்த அரசோ அமைப்போ அல்லது தனி நபரோ அவர்களைத் தண்டிக்கவோ அல்லது வேறெந்த வகையிலும் எதிர்நடவடிக்கை மேற்கொள்ளவோ உரிமையில்லை.’’

எனவே, மார்க்கத்தை விட்டு விடுபவருக்கு இஸ்லாம் தண்டனையை விதித்துள்ளது என்ற ஆட்சேபனை அநீதியானதும் அடிப்படையற்றதுமாகும். எனவே, இஸ்லாத்தின் போதனைகள் அனைத்தும் அல்லாஹ்வையும் அவனது இருப்பையும் அவன் முழு பிரபஞ்சத்தின் காத்தோம்புபவனும் பரிபாலிப்பவனும் ஆவான் என்ற உண்மையையும் மையமாகக் கொண்டுள்ளன. அதைப்போன்றே ஒரு முஸ்லிம் பிரிவினர் கருணையற்ற முறையில் கொடுமை இழைத்து அல்லது பயங்கர வாதத்தின் ஏதோ ஒரு வடிவத்தைக் கைக் கொண்டால் அவர்கள் முழு மனித குலத்தின் காத்தோம்புபவன் என்ற இறை பண்பை மறுக்கின்றனர்.

இதற்கு மாற்றமாக, சில முஸ்லிம்கள் அல்லாஹ்வை பிரபஞ்சத்தின் எஜமானன் என்றும் அனைத்து உலகங்களின் காத்தோம்புபவன் என்றும் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் அதன் அசல் பொருளை உண்மையில் உணர்ந்து கொள்ளவில்லை. அதன் விளைவாக

**பிறரது பின்னணியும் நம்பிக்கையும் எப்படி இருப்பினும் ஒரு தாய் தனது குழந்தையை நேசிப்பது போன்று ஓர் உண்மையான முஸ்லிம் உண்மை யாகவே பிறருடன் நேசம் கொள்ள வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். நிச்சயமாக இதுவே மிக உயர்ந்த மிகத் தூய்மையான அன்பாகும்.**

இஸ்லாத்தின் அசல் போதனைகளை விட்டும் அவர்கள் வெகுதூரம் சென்று விட்டனர். எனவே, இஸ்லாத்தின் உண்மையான போதனைகளைக் கொண்டு மனிதகுலத்தை ஒளியூட்டவும் அவற்றை கற்றுத் தரவும் எங்களது ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகவும் இக்காலத்தின் சீர்திருத்தவாதியாகவும் அல்லாஹ் அனுப்பியுள்ளான் என அஹ்மதி முஸ்லிம்களாகிய நாங்கள் நம்புகிறோம்.

மார்க்கப் போர்களின் காலம் முடிந்து விட்டது என்றும் மனிதகுலம் அமைதியுடன் அவர்களைப் படைத்தவனின் உரிமைகளை நிறைவேற்றவும் ஒருவருக்கொருவரின் உரிமைகளைப் பேணவும் வல்லமைமிக்க இறைவன் விரும்புகின்றான் என்றும் அவர்கள் எங்களுக்கு தெரிவித்தார்கள். இதைக் குறித்து தம்மைப் பின்பற்றியவர் களிடம் உரையாற்றியவாறு காதியானைச் சார்ந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் இவ்வாறு ஒருமுறை கூறினார்கள்: இஸ்லாமிய போதனைகளின் உண்மையான தத்துவத்தின் அடிப்படையில் மார்க்கத்தில் இரண்டு அம்சங்கள் மட்டுமே உள்ளன. அல்லது மார்க்கம் என்பது இவ்விரண்டு மாபெரும் குறிக்கோள்களை அடிப்படை யாகக் கொண்டுள்ளது எனக் கூறலாம். முதலாவதாக, ஏக இறைவனை முழு உறுதியுடன் அறிந்து கொண்டு நேசம் மற்றும் கட்டுப்படுதலின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப அவனிடம் நேர்மையுடன் நேசம் கொள்வதும், அவனுக்குக் கட்டுப்படுவதில் உங்களையே மாய்த்துக் கொள்வதும் ஆகும். இரண்டாவது குறிக்கோள், அவனது மக்களுக்கு தொண்டு செய்வதும், பிறருக்கு கனிவுடன் பணி செய்வதில் உங்களது அனைத்து தகுதிகளையும் திறமைகளையும் பயன்படுத்துவதும், உங்களிடம் நேசத்துடன் நடந்து கொள்பவர்கள் எவராக இருப்பினும் அவர்கள் உங்களது அரசராகவோ, ஆட்சி யாளராகவோ அல்லது மக்களிலே மிக எளிமையும் பணிவும் கொண்டவராகவோ இருப்பினும் சரியே. அவர்களிடம் எப்போதும் மனப்பூர்வமாக நன்றி பாராட்டுவதும் அதற்கு பதில் நன்மை செய்வதும், நீங்கள் எப்போதும் அவர்களிடம் ஓர் அன்பின் உறவை நிலை நிறுத்துவதும் ஆகும்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் அதிகாரம் 16 வசனம் 91 –ன் உண்மையான பொருளையும் விளக்கி யுள்ளார்கள். அதில் அல்லாஹ் கூறுகின்றான்: “நிச்சயமாக அல்லாஹ் நீதியையும் பிறருக்கு நன்மை செய்வதையும் உறவினருக்கு வழங்குவது போன்று வழங்கவும் கட்டளையிடுகிறான்.”

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனர் கூறுவதாவது, இந்த வசனத் தில் முஸ்லிம்கள் பிறருடன் நீதமாகவும் நேர்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என அல்லாஹ்வால் கட்டளையிடப் பட்டுள்ளனர். எனவே பிற அனைத்து மக்களும் முஸ்லிம்களுடன் அனுதாபத் துடன் நடக்காவிட்டாலும் எவ்வகையிலும் நன்மை செய்யாவிட்டாலும் முஸ்லிம்கள் மற்ற மக்களுடன் நேசத்துடன் நடந்து அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும்.

இறுதியாக அவர்கள் விளக்கினார்கள்: இந்த வசனம் ஒரு முஸ்லிமிடம் எதிர்பார்ப்பது என்னவெனில் இறைவனின் படைப்பை எந்த அளவுக்கு அவர் நேசிக்க வேண்டுமெனில் உலகில் உள்ள ஒவ்வொரு மனிதரையும் தனது நெருங்கிய உறவினர் போன்று அவர் கருத வேண்டும்.

பிறரது பின்னணியும் நம்பிக்கையும் எப்படி இருப்பினும் ஒரு தாய் தனது குழந்தையை நேசிப்பது போன்று, ஓர் உண்மையான முஸ்லிம் உண்மையாகவே பிறருடன் நேசம் கொள்ள வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். நிச்சயமாக இதுவே மிக உயர்ந்த மிகத் தூய்மையான அன்பு ஆகும். ஏனெனில், இரண்டாவது கட்டத்தைப் பொருத்தவரை ஒருவர் நேசத்தை வெளிப்படுத்தினால் அல்லது உதவி செய்தால் சுயமுனைப்பின் ஓர் அம்சம் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ இருப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. தான் செய்த நன்மைகளைச் சுட்டிக்காட்டி அவற்றிற்குப் பதிலாக பிரதி உபகாரத்தை அவர் எதிர்பார்க்கக் கூடும்.

ஆனால் ஒரு தாயின் அன்பு உண்மையிலேயே தன்னலமற்றதும் பிறர் நலம் பேணுவதும் ஆகும். அவளுக்கு அவளது குழந்தையுடனான தனித்துவமிக்க தொடர்பு எத்தகையது எனில், தனது சந்ததிகளுக்காக அனைத்தையும் தியாகம் செய்ய அவள் முன்வருகிறாள். அவள் பதிலுக்கு எதையும் எதிர்பார்ப்பதில்லை. புகழப்படுவதையோ அல்லது போற்றப்படுவதையோ அவள் விரும்புவதுமில்லை. எனவே இதுவே இஸ்லாம் வலியுறுத்துகின்ற இறுதிப் படித்தரமாகும். இதன்படி அனைத்து முஸ்லிம்களும் ஒரு தாய் தனது குழந்தையை நேசிப்பது போன்று மனித குலத்தை நேசிக்க வேண்டும். இவையெல்லாம் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளாகும்.



**உண்மை முஸ்லிம்கள் ஒரு தாயின் அன்பை அனைவரிடமும் காட்டுவர்; தமது பிள்ளைகளிடம் மட்டுமல்ல.**

அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் அவனது பண்புகளை மேற்கொள்ள வேண்டும் என அல்லாஹ் கூறியுள்ளான். எனவே ஓர் உண்மையான முஸ்லிம் கொடியவராக இருக்கவே முடியாது. அதைப் போன்று இஸ்லாத்தால் அநீதி, வன்முறை அல்லது பயங்கரவாதம் ஆகியவற்றின் எந்த வடிவத்தையும் அனுமதிக்கவும் முடியாது. கடந்த வருடங்களில் இந்த கருத்தினை நான் மீண்டும் மீண்டும் கூறி வந்திருக்கிறேன். மேலும் இஸ்லாத்தின் இந்த அடிப்படை போதனைகளை வலியுறுத்தியுள்ளேன்.

நான் கூறி வருவது இஸ்லாத்தின் ஆதாரப்பூர்வ போதனைகளே என்பதை நிரூபிப்பதற்காக நான் மீண்டும் மீண்டும் திருக்குர்ஆனிலிருந்து சான்றுகளை காட்டியிருக்கிறேன். இருந்தபோதிலும் நமது அமைதியான உள்ளார்ந்த தூதுச் செய்தி ஊடகங்களால் அதிகமாக வெளியிடப்படுவதில்லை. ஆனால் மறுபக்கம் காட்டுமிராண்டித்தனத்திலும் கொலை வெறியிலும் ஈடுபடுகின்ற வெகு சிலரைக் குறித்து இடைநில்லா முழு உலக ஊடக முக்கியத்துவமும் கவனமும் தரப்படுகிறது.

**பெரும்பாலான தீவிரவாத அல்லது பயங்கரவாதக் குழுக்களை வாழ வைக்கின்ற பிராண வாயு விளம்பரமே ஆகும். எனவே நான் கூறியதை ஊடகங்கள் கைக்கொண்டால் உலகைத் துன்புறுத்திக் கொண்டிருக்கும் தீவிரவாதமும் வன்முறையும் விரைவில் மரணிக்கத் தொடங்கி விடும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.**

பொதுமக்களின் கருத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதில் ஊடகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. எனவே ஊடகங்கள் இந்த ஆற்றலை பொறுப்புடன் நன்மையின் சக்தியாகவும் அமைதியின் சக்தியாகவும் பயன்படுத்த வேண்டும். அவை ஒரு சிறுபான்மையினரின் கருணையற்ற செயல்களை மையப்படுத்துவதை விட்டு விட்டு உண்மை இஸ்லாம் எதனை எடுத்துரைக்கிறது என்பதை உலகிற்கு காட்ட வேண்டும்.

பெரும்பாலான தீவிரவாத அல்லது பயங்கரவாத குழுக்களை வாழவைக்கின்ற பிராணவாயு விளம்பரமே ஆகும். எனவே நான் கூறியதை ஊடகங்கள் கைக்கொண்டால் உலகை துன்புறுத்திக் கொண்டிருக்கும் தீவிரவாதமும் வன்முறையும் விரைவில் மரணிக்கத் தொடங்கி விடும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. இஸ்லாத்தைப் புண்படுத்தி அதன் உன்னத போதனைகளை மீறிவருகின்ற பயங்கர–வாதிகள் எவ்வாறு தமது வெறுக்கத்தக்க செயல்களை இஸ்லாத்தின் பெயரால் நியாயப்படுத்த முடியும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இஸ்லாத்தின் அமைதிப் போதனைகள் பயங்கரவாதத்தின் அனைத்து வடிவங்களையும் தடை செய்கிறது. எந்த அளவுக்கு எனில் முறையான போர் வேளையிலும் கூட எந்தவொரு நடவடிக்கையோ அல்லது தண்டனையோ இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு ஏற்பவே இருக்க வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். மேலும் பொறுமையும் மன்னிப்பும் கைக்கொள்ளப் பட்டால் அது இன்னும் சிறந்ததாகும். எனவே வன்முறையிலும் அநீதியிலும் காட்டுமிராண்டித்தனத்திலும் ஈடுபடுகின்ற பெயர் தாங்கி முஸ்லிம்கள் இறைவனின் சாபத்தையும் கோபத்தையுமே தமது வாசலுக்கு அழைக்கின்றனர்.

இஸ்லாத்தின் மீதான பயம் அதிகரித்துக் கொண்டிருக்கிற இவ்வேளையில் திருக்குர்ஆன் அன்பையும் நேசத்தையும் தயாளத்தையுமே மீண்டும் மீண்டும் கட்டளையிடுகின்றது என்பதை நான் வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன். சில குறிப்பான தருணங்களில் திருக்குர்ஆன் தற்காப்புப் போருக்கு அனுமதி வழங்குகிறதென்றால் அது அமைதியை நிலைநாட்டுவதற்காக மட்டுமே ஆகும். இன்று போரில் ஈடுபடுகின்ற பெரும்பாலான முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத அரசுகளும் குழுக்களும் கூட அமைதியை நிலைநாட்டுவதற்கே தாம் போர் புரிவதாக கூறுகின்றன.

கண்ணோட்டத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, பெரும்பாலான மக்கள் சில உலக சக்திகள் நடத்துகின்ற போர்களைக் கண்டு கொள்ளாமலிருக்கவே விரும்புகின்றனர் அல்லது குறைந்தபட்சம் அவற்றின் நடவடிக்கைகளை எந்த ஒரு மார்க்கத்துடனோ அல்லது நம்பிக்கையுடனோ அவர்கள் தொடர்புபடுத்துவதில்லை. எனினும் இஸ்லாத்தின் போதனைகள் குறிவைக்கப்படுகின்ற ஒரு சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருப்பதால் முஸ்லிம்களால் நிகழ்த்தப்படும் அனைத்து கொடூரங்களும் அல்லது போர்களும்

உடனடியாக இஸ்லாமிய போதனைகளோடு தொடர்புபடுத்தப்படுகின்றன. ஆனால் இஸ்லாத்தின் உண்மையான அமைதி நிறைந்த போதனைகளைப் பரப்புவதற்கு முயற்சி செய்கின்றவர்கள் மற்றும் அத்தகைய அமைப்புகளின் குரல்கள் கேட்கப்படுவதுமில்லை. பரவலாக வெளியிடப்படுவதுமில்லை.

எனது கருத்தின்படி இது அநீதியும் மிகவும் எதிர்மறையான விளைவைத் தரக் கூடியதுமாகும். உலகம் தழுவிய மோதல்கள் நடைபெறும் இவ்வேளையில் அனைத்து வகையான தீமைகளும் கொடூரங்களும் அமுக்கப்பட வேண்டும். அனைத்து வகையான நன்மைகளும் மனிதநேயமும் ஆதரிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படை விதியை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த வழிமுறை மூலம் தீமை வெகுதூரம் பரவாது. அதே வேளையில் நன்மையும் அமைதியும் எல்லா இடமும் விரிந்து பரவி நமது சமூகத்தை அலங்கரிக்கும்.

உலகில் நிகழ்வுறும் நன்மையை நாம் ஆதரிக்கும்போது நாம் நெஞ்சாரப் போற்றுகின்ற கருணையையும் மனித நேயத்தையும் சீர்குலைக்க முயற்சி செய்கின்றவர்களை நாம் வெற்றி கொள்ள இயலும். எனினும் உலகு இந்த விதியினை ஏற்றுக் கொண்டதாகவோ அல்லது விளங்கியதாகவோ தெரியவில்லை. எனவேதான் ஊடகங்கள் இவற்றைப் பரப்புவதற்கு அல்லது இவற்றை காண்போரின் எண்ணிக்கைக்கு உலக அமைதியைக் காட்டிலும் தொடர்ந்து முன்னுரிமை கொடுத்து வருகிறது. காட்டுமிராண்டித்தனத்தில் ஈடுபடுகின்ற மிகச் சிறிய சிறுபான்மையினரை மகிழ்ச்சியுடன் மையப்படுத்திக் காட்டுகின்ற ஊடகங்கள் இதன் மூலம் தாயிஷ் போன்ற தீய குழுக்களின் பிரச்சார இயந்திரங்



ஊடகங்கள் தம்மைப் பற்றி மதிப்பீடுகளைக் காட்டிலும் அமைதிக்கு முன்னுரிமை வழங்கினால் தாயிஷ் போன்ற தீவிரவாத அமைப்புகளின் உடனடி மரணத்தை நாம் விரைவில் காணலாம்.

களுக்கு உணவளிக்கின்றன. இருப்பினும் உலகிலுள்ள நல்ல விஷயங்களை வெளிச்சமிட்டுக் காட்ட வேண்டிய தமது கடமையில் தவறி விடுகின்றன.

இது எப்படிப்பட்ட ஓர் அநீதி எனில் இதனால் இன்னும் கூடுதலான பிளவுகளும் சண்டைகளும் விதைக்கப்படுகின்றன. உலக அரசியலின் பார்வையிலும் தீவிர–வாதத்தை முறியடிக்கும் முயற்சியிலும் அமைதியை நிலைநாட்டுவதே நமது தலையாய கடமை என்பதையும் இதற்காக அனைத்து தரப்பினரும் விட்டுக் கொடுக்க வேண்டியது அவசியம் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரு முஸ்லிமின் வார்த்தைகளை நீங்கள் நம்பமாட்டீர்கள் எனில் முஸ்லிமல்லாத, புகழ் பெற்ற, அரசியல் விஷயங்களை நன்கு அறிந்த, உலகில் அமைதியை நிலைநாட்ட விரும்புகின்ற சிலரின் கருத்துக்களை நான் உங்கள் முன் வைக்கின்றேன். குறிப்பாக பயங்கரவாதத்தை அதிலும் குறிப்பாக தாயிஷ் அமைப்பை முறியடிப்பது தொடர்பாக சமீபத்தில் ஆஸ்திரியாவின் வெளியுறவு அமைச்சர் இவ்வாறு கூறினார்:

**காட்டுமிராண்டித்தனத்தில் ஈடுபடுகின்ற மிகச் சிறிய சிறுபான்மையினரை மகிழ்ச்சியுடன் மையப்படுத்திக் காட்டுகின்ற ஊடகங்கள் இதன் மூலம் தாயிஷ் போன்ற தீய குழுக்களின் பிரச்சார இயந்திரங்களுக்கு உணவளிக் கின்றன. இருப்பினும் உலகிலுள்ள நல்ல விஷயங்களை வெளிச்ச மிட்டுக் காட்ட வேண்டிய தமது கடமையில் தவறிவிடுகின்றன.**

“இஸ்லாமிய அரசின் (IS) பயங்கர வாதத்திற்கு எதிரான போரில் அதிபர் அல் அஸாதை இணைத்துக் கொள்வது உட்பட நடைமுறைக்கு சாத்தியமான அணுகு முறையை நாம் பின்பற்ற வேண்டும். எனது கருத்தின்படி தீவிரவாதத்திற்கு எதிரான போருக்குத்தான் முன்னுரிமை தரப்பட வேண்டும். ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகள் தலையிடாமல் இது சாத்தியமில்லை.”

த இலண்டன் ஸ்கூல் ஆஃப் எகனா மிக்ஸில் பல வருடங்கள் கற்றுக் கொடுத்த ஒய்வு பெற்ற அரசியல் தத்துவயியல் அறிஞர் ஜான் கிரே நடைமுறையிலுள்ள அரசியல் அமைப்பைக் காட்டிலும் அமைதிக்கு முன்னுரிமை தரப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பற்றி சமீபத்தில் இவ்வாறு எழுதுகிறார்:

“அரசின் வடிவமாக, ஜனநாயகம், குடியரசு, கொடுங்கோலாட்சி அல்லது முடியரசு எதுவாக இருப்பினும், அது அமைதியை நிலை நிறுத்துவதை விட குறைவான முக்கியத்துவம் கொண்டதே யாகும்.”

எனது கருத்தின்படி இது ஒரு நுட்பமான ஞானத்தைக் கொண்ட கருத்தாகும். இருப்பினும், ஓரளவு நிலையான ஆட்சியை முன்னதாகக் கொண்டிருந்த நாடுகளில் கூட ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கே உலகின் பெரும் சக்திகள் தொடர்ந்து முன்னுரிமை தருகின்றன.

எடுத்துக்காட்டாக, ஈராக்கில் சதாம் ஹுஸைனை நீக்கவேண்டுமென மேற்கத்திய சக்திகள் தீர்மானித்தன. பதிமூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த துயரமிகு விளைவுகள் இன்று வரை தொடர்ந்து உணரப்படுகின்றன. மிக முக்கியமான மற்றொரு எடுத்துக்காட்டு லிபியா ஆகும். 2011 –ல் அங்கு அதிபர் கடாஃபி வலுக்கட்டாயமாக அதிகாரத்தில் இருந்து அகற்றப்பட்டார். அப்போது இருந்தே அந்த நாடு சட்டமற்ற நிலை என்ற சுழற்சியிலும் கட்டுக்கடங்காத பெருங் குழப்பத்திலும் சிக்கியுள்ளது.

லிபியாவில் ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்தின் நேரடிய விளைவாக தாயிஷ் அந்நாட்டில் தனது தளத்தையும் தீவிரவாத தளத்தையும் தீவிரவாத கட்டமைப்பையும் நிறுவி அதனை தொடர்ந்து வலுப்படுத்தி வருகின்றது. இதனால் அந்த பிராந்தியத் திற்கு மட்டுமல்ல ஐரோப்பாவிற்கே மிகவும் அபாயகரமான நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனை குறித்து நான் சில வருடங்களுக்கு முன்பே எச்சரித்திருந்தேன். எனவே இத்தகைய நாடுகளில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கக் கூடாது.

மாறாக, நீடித்த அமைதியை நிலை நாட்டுவதற்காக பொதுமக்களுக்கு அவர் களுக்குரிய உரிமைகள் வழங்கப்படுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும். சிரியாவைப் பொருத்தவரை ஆஸ்திரிய வெளியுறவு அமைச்சர் கூறியவாறு அமைதியை நிலைநிறுத்துவதையே தலையாய குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்ற கருத்துடன் நான் உடன்படுகிறேன். எனவே வல்லரசுகள்

சிரியாவின் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான வழிவகைகளை திறந்திட முன்வர வேண்டும். மேலும் அந்த பிராந்தியத்தில் செல்வாக்குள்ள நாடுகளின் உதவியைப் பெற்றுக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.

பெரும் நன்மைக்காக தனது சுய இலாபங்களை விட்டுவிடவும் எல்லா நேரமும் நீதமாக நடக்கவும் முன்வந்தால் மட்டுமே நல்ல மாற்றம் ஏற்பட முடியும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நான் ஏற்கனவே கூறியபடி நீதி என்னும் அடிக்கல்லின் மீதே அமைதி கட்டப்படு கிறது என இஸ்லாம் கூறுகிறது. எனவே நமது காலத்தின் அவசரத் தேவைகளின் பக்கம் நாம் கவனம் செலுத்த வேண்டும். உலகம் மற்றோர் உலகப் போரின் பக்கம் விரைந்து செல்கிறது என்று பல வருடங்களாக நான் கூறி வந்துள்ளேன். இப்போது மற்றவர்களும் இந்த முடிவிற்கே வந்துள்ளனர்.

உண்மையில் சில முக்கியஸ்தர்கள் ஓர் உலகப் போர் ஏற்கனவே ஆரம்பித்து விட்டது என தாம் நம்புவதாக தற்போது கூறுகின்றனர். இருப்பினும் இத்தகைய போரை அதன் வழியிலேயே தடுத்து விடுவதற்கு இன்னும் நேரம் இருக்கிறது என்றே நான் நம்புகிறேன். ஆனால் இதற்கான தீர்வு நான் ஏற்கனவே கூறியபடி நீதியுடன் நடப்பதும் எல்லா தன்னல நோக்கங்களையும் விட்டு விடுவதுமே ஆகும். பயங்கரவாத குழுக் களுக்கு நிதி உதவியையும் ஆயுத வினியோகத்தையும் துண்டித்து விடுவதன் அதிமுக்கியத்துவத்தை முந்தைய பல தருணங்களில் நான் கூறியுள்ளேன்.



**ஓர் அரசு எந்த வடிவத்தைச் சார்ந்தது என்பதைக் காட்டிலும் அது ஒரு அமைதியான நிலையான சமூகம் ஏற்படுவதற்கு உத்திரவாதம் தருகிறதா என்பதுவே மிக முக்கியமானதாகும்.**

இருப்பினும் இதற்கான முழு முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாக கூற முடியாது. எடுத்துக்காட்டாக, ஈராக்கின் மத்திய வங்கி நடத்துகின்ற ஏல விற்பனைகளிலிருந்து பெரும் அளவிலான அமெரிக்க டாலர்களை தாயிஷ் பெற்று வருவதாக சமீபத்தில் வால் ஸ்டிரீட் சேனலில் வெளியிடப் பட்டுள்ள ஒரு சிறப்பு ஆய்வறிக்கை கூறுகிறது.

இந்த டாலர்கள் அமெரிக்காவின் பெடரல் ரிசர்விலிருந்து ஈராக்கிற்கு நேரடியாக வழங்கப்படுகிறது. அமெரிக்க அரசு இதனை குறைந்தபட்சம் ஜூன் 2015 முதல் அறிந்திருக்க வேண்டும் என அந்த கட்டுரை கூறுகிறது. எனினும் நான் தனிப்பட்ட முறையில் நம்புவது என்னவெனில் இந்த வணிகம் குறித்து உலக சக்திகளுக்கு நீண்ட காலமாகவே தெரியும்.

மேலும் எண்ணெய் விற்பனையைப் பொருத்தவரை பல அமைப்புகளும் அரசு களும் கூட தாயிஷிடமிருந்து எண்ணெய்

கொள்முதல் செய்கின்றன என்பது நன்கு தெரிந்ததே ஆகும். இந்த வணிகம் நிறுத்தப்படாதது ஏன்? இத்தகைய வியாபார ஒப்பந்தங்களைத் தடுத்து நிறுத்த ஒருங்கிணைந்த தடை நடவடிக்கைகள் ஏன் மேற்கொள்ளப் படவில்லை? எண்ணெயைப் பெற்றுக் கொள்ளும் விஷயம் வரும்பொழுது நன்னடத்தை காற்றில் பறந்து விடுகிறது போல் தெரிகின்றது. இதனை இலண்டன் கிங்ஸ் காலேஜின் பேராசிரியர் லெயிஃப் வெனர் ஒரு சமீபத்தைய கட்டுரையில் இவ்வாறு கூறியுள்ளார்:

“உலகம் எண்ணெய்யைப் பெற்றுக் கொள்வதற்காக அனைத்து வகையான கொடுமைகளையும் சகித்துக் கொள் கிறது. இவ்வாறு நாடுகள் தாயிஷிடம் இருந்தும் மனித உரிமை மீறல் பெரிதும் நடைபெறுகின்ற சூடானிலிருந்தும் எண்ணெய்யைப் பெறுகின்றன. இவ்வாறு செய்வது உடைமைகளின் உரிமைகளை வன்முறை மூலம் உருவாக்கக் கூடாது என்ற முறைப் படுத்தப்பட்ட அடிப்படை சந்தை பொருளாதார விதியை மீறுகின்ற செயலாகும்.”



ஃபெடரல் ரிசர்விலிருந்து ஈராக்கின் சென்ட்ரல் வங்கி மூலமாக தாயிஷ் டாலர்களைப் பெற்றுக் கொள்கிறது. ஆரம்ப இடத்திலேயே நிதி உதவியை துண்டித்து விடுவதன் மூலம் இத்தகைய தீவிரவாத அமைப்புகளை நாம் முறியடிக்க முடியும்.

மேலும் ஈராக் எனர்ஜி இன்ஸ்டிடியூட்டின் இயக்குனர் ஒரு சமீபத்திய கட்டுரையில் தாயிஷ் அமைப்பு எவ்வாறு எண்ணெய் விற்பனை செய்கிறது என்பதைப் பற்றி இவ்வாறு எழுதுகிறார்:

“கச்சா எண்ணெய் டேங்கர்கள் மூலமாக அன்பார் பகுதி வழியாக ஜோர்டானுக்கும், குர்திஷ்தான் வழியாக ஈரானுக்கும், மோசுல் வழியாக துருக்கிக்கும், சிரியாவின் உள்நாட்டு சந்தைக்கும் ஈராக்கின் குர்திஷ்தான் பகுதிக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. அங்கு அவற்றின் பெரும் பகுதி உள்ளூரிலேயே சுத்திகரிப்பு செய்யப்படுகின்றது. இந்த வணிகத்தில் அரசு அதிகாரிகள் உடந்தையில்லை என்பதை பகுத்தறிவு ஏற்றுக் கொள்ளாது.”

எனவே, தீவிரவாதத்தையும் பயங்கரவாதத்தையும் முடிவுக்குக் கொண்டுவர எல்லா முயற்சிகளும் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டாலும் சான்றுகள் இந்த அறிவிப்பை உறுதி செய்யவில்லை. இவ்வாறிருக்க, உலகில் உண்மையான நீதி இருப்பதாக எவ்வாறு கூற முடியும்? நேர்மையும் நம்பகத்தன்மையும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன என்று எவ்வாறு கூற முடியும்? இதைப் போன்று சர்வதேச ஆயுத விற்பனையைக் குறித்தும் சமீபத்தில் ஊடகங்களின் செய்தி வெளி வந்துள்ளது.

அதிகாரப்பூர்வ அறிவிப்புகளின்படி சென்ற ஆண்டு அமெரிக்கா 46.6 பில்லியன் டாலர்கள் மதிப்புள்ள ஆயுதங்களை ஏற்றுமதி செய்துள்ளது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 12 பில்லியன் டாலர்களைவிட அதிகமாகும். அந்த ஆயுதங்களில் பெரும் பகுதி மத்தியக் கிழக்கு நாடுகளுக்கு விற்கப் பட்டிருப்பதாகவும் அவற்றைப் பெற்றுக் கொண்டு அவை சிரியா, ஈராக் மற்றும் ஏமன் நாடுகளில் போரை மூட்டுகின்றன என்றும் அந்தக் கட்டுரை கூறுகிறது. நான் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன். இத்தகைய ஒரு வணிகம் நடைபெறுகிறதென்றால் நீதியையும் அமைதியையும் எவ்வாறு நிலைநாட்ட முடியும்?

நான் கூறிய இந்த அனைத்து எடுத்துக்காட்டுகளுமே பொது அரங்கில் கூறப்பட்டவையே. அவை மதிப்பிற்குரிய ஆய்வாளர்கள் மற்றும் கருத்துரையாளர் களின் கருத்துக்களாகும். சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் நாடுகளுக் கிடையிலும் நீதியின் விதிகள் செயல்படுத்தப்படாத வரை உண்மையான அமைதியை நாம் உலகில் காண முடியாது. நீதியைக் கைக்கொள்ளாமல் தாயிஷ் மற்றும் பிற பயங்கரவாத குழுக்களைத் தோற்கடிக்க பல ஆண்டுகள் ஆகலாம்.

எனினும் உலகம் இந்த தூதுச் செய்திக்கு செவிமடுத்து தீவிரவாதத் திற்கு நிதி உதவியையும் ஆயுத விநியோகத்தையும் கட்டுப்படுத்த நீதியுடன் கலப்பற்ற முயற்சிகளையும் மேற்கொண்டால், ஓர் அமெரிக்க ஓய்வு பெற்ற இராணுவத் தளபதி தாயிஷிற்கு எதிரான போர் பத்து முதல் இருபது ஆண்டுகள் நீடிக்கும் என்று சமீபத்தில் கூறியது போன்றல்லாமல், உலகை துன்புறுத்தி வரும் தீவிரவாதத்தின் கட்டமைப்புகள் உடனடியாக அழிக்கப்பட்டு விடும் என நான் நம்புகிறேன்.

இறுதியாக, உலகம் அதனைப் படைத்தவனை அறிந்து கொண்டு அவனை மனித குலத்தை காத்தோம்புபவனாக ஏற்றுக் கொள்ளாத வரை உண்மையான நீதி தழைக்க முடியாது. உண்மையான நீதி தழைக்க முடியாது என்பது மட்டுமல்ல; நாசத்தை விளைவிக்கும் அணு ஆயுதப் போர் ஒன்றை நாம் எதிர்கொள்வோம். அதன் பேரழிவைத் தரும் விளைவுகளை நமது எதிர்கால சந்ததிகளும் சந்திப்பர். இந்த உண்மை நிலையை உலகம் புரிந்து கொள்ள வேண்டுமென நான் பிரார்த்திக்கின்றேன். மனிதகுல மேம்பாட்டிற்காக நாம் தத்தமது பங்கினை வழங்குவதற்காகவும் நான் பிரார்த்திக்கின்றேன். முழு உலகிலும் நீதியின் அடிப்படையில் உண்மையான அமைதி நிலைநாட்டப்படுவதற்காக நான் பிரார்த்திக்கின்றேன். இந்த வார்த்தைகளுடன் இந்த மாலை வேளையில் நம்முடன் கலந்து கொண்டதற்காக நமது விருந்தினர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அல்லாஹ் உங்கள் அனைவர் மீதும் அருள்பாலிப்பானாக! மிக்க நன்றி!!




**கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள்**
**கலீஃபா அவர்களுடன் அமைதிப் பிரார்த்தனையில்.**




மக்களை இறைவன் பக்கம் அழைப்பதற்காக ஒரு தனிக் குரல் மக்கா நகரில் இறைவனின் கட்டளைக்கிணங்க எழுப்பப்பட்டது. இந்த அழைப்பிற்குப் பதில் தருவதன் மூலமாக மனித இனம் உண்மையான கண்ணியம், கவுரவம், வளம் இவ்வுலகிலும் மறுவுலகிலும் பெற்றுக் கொள்ளும் என அறிவிக்கப்பட்டது.

இந்தக் குரல் நபிமார்களின் முத்திரை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் குரலேயாகும். புகழ் பெற்ற இந்த வரலாற்று நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் வரலாற்றில் மிகவும் பிரபல்யமான ஒருவரது வாழ்வினை எளிதில் புரிந்து கொள்ளும் விதத்தில் எடுத்துரைத்துள்ளார்கள்.

இணையதளத்தில் படிப்பதற்கு:

http://www.alislam.org/tamil/books/HazatMuhammad(sal)AvarhalinVazhkai.pdf

கிடைக்குமிடம்: noorulislam@qadian.in




உலகம் தற்போது மிகவும் குழப்பம் மிகுந்த காலக்கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கிறது. உலகப் பொருளாதார நெருக்கடி ஒவ்வொரு கட்டத்திலும் புதிய விபரீதமான அபாயங்களை வெளிப்படுத்துகிறது. தற்போதைய சூழ்நிலைகளுக்கும் இரண்டாம் உலகப் போர் மூண்டதற்கு காரணமாக இருந்த நிலைமைகளுக்கும் இடையேயான ஒப்புமை தெளிவாகவே தெரிகிறது. நிகழ்வுகள் விரைவாக மூன்றாம் உலகப்போரை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. ஓர் அணு ஆயுதப் போரின் விளைவுகள் நமது கற்பனைக்கும் அப்பாற்பட்டதாக இருக்கிறது.

இந்த நூலில் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஐந்தாவது கலீ:பாவும் உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவருமாகிய ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அமெரிக்காவின் கேப்பிட்டல் ஹில், பிரிட்டீஷ் பார்லிமெண்ட், ஐரோப்பிய பார்லிமெண்ட் உள்ளிட்ட முக்கிய இடங்களில் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க உரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. மேலும் இந்நூலில் அவர்கள் பல உலகத் தலைவர்களுக்கு எழுதிய மிக முக்கியமான கடிதங்களும் இடம்பெற்றுள்ளன. நாடுகள் பிறருடன் நடந்து கொள்ளும் விஷயங்களில் முழுமையான நீதியை நிலைநாட்டினால் மட்டுமே உலகப் பேரழிவைத் தவிர்க்க முடியும் என்பதை அன்னார் மீண்டும் மீண்டும் நினைவூட்டியுள்ளார்கள். ஒருவருக்கொருவர் பகைமையுடன் இருப்பினும் கூட எல்லா நேரமும் பாரபட்சமற்ற நிலையைக் கைக்கொள்ள வேண்டும். ஏனெனில் இது மட்டுமே வெறுப்பின் அனைத்து தடயங்களையும் அகற்றி நீடித்த அமைதியை நிலைநாட்டுவதற்கான வழியாகும் என்பதை வரலாறு நமக்கு கற்பித்துள்ளது.

இணையதளத்தில் படிப்பதற்கு: www.alislam.org

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைக் குறித்த ஓர் அறிமுகம்

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஒரு செயல் துடிப்புள்ள, விரைந்து செல்கின்ற, சர்வதேச இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கமாகும். 1889 -ல் நிறுவப்பட்ட இந்த ஜமாஅத் 206 -க்கும் அதிகமான நாடுகளில் பரவி பல கோடி உறுப்பினர்களைக் கொண்டதாகத் திகழ்கிறது. இதன் தற்போதைய தலைமையகம் பிரிட்டனில் உள்ளது.

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்படும் மெஸாயாவின் வருகை காதியானைச் சேர்ந்த ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் (1835-1908) தோற்றத்தின் மூலம் நிறைவேறி விட்டது என்று நம்புகின்ற ஒரே இஸ்லாமிய அமைப்பு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மட்டுமே ஆகும். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தம்மை நாசரேத்தைச் சார்ந்த இயேசுவின் உவமை வடிவிலான இரண்டாவது வருகை என்றும் இஸ்லாத்தின் தூதர் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களால் முன்னறிவிக்கப்பட்ட சீர்திருத்தவாதி என்றும் வாதித்தார்கள். ஹஸ்ரத் இயேசு (அலை) அவர்களைப் போன்று மார்க்கப் போர்களை நிறுத்துவதற்கும், இரத்தம் சிந்துதலைக் கண்டிக்கவும், நற்பண்புகளையும், நீதியையும், சமாதானத்தையும் மீண்டும் நிலைநாட்டுவதற்கும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை இறைவன் அனுப்பியுள்ளான் என்று அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் நம்புகிறது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் தோற்றம் இஸ்லாமிய மறுமலர்ச்சியின் தன்னிகரற்ற ஒரு காலக்கட்டத்தை உருவாக்கியுள்ளது. அவர்கள் இஸ்லாத்தின் உண்மையான அடிப்படை போதனைகளை பெரு முயற்சியுடன் முன்னிறுத்தியதன் மூலமாக பிற்போக்கான கொள்கைகளையும் பழக்கங்களையும் விட்டும் அதனை தூய்மைப்படுத்தினார்கள். மேலும் அவர்கள் ஜெராஸ்டர் (அலை), ஆபிரஹாம் (அலை), மோசே (அலை), இயேசு (அலை), கிருஷ்ணர் (அலை), புத்தர் (அலை), கன்ஃபுஸியஸ் (அலை), லாவோட்சூ (ரலி) மற்றும் குருநானக் (ரலி) போன்ற மார்க்கத் தோற்றுனர்கள் மற்றும் மகான்களின் உன்னத போதனைகளை அங்கீகரித்ததுடன், அவை எவ்வாறு உண்மை இஸ்லாத்தின் போதனைகளில் மையப்படுத்தப்பட்டுள்ளன என்பதனையும் விளக்கினார்கள்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தீவிரவாதத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் மறுக்கின்ற ஒரு முன்னணி இஸ்லாமிய அமைப்பாகும். தனிநபர், சமூக, பொருளாதார, தேசிய, சர்வதேச உறவுகள் உள்ளிட்ட அனைத்து மட்டங்களிலும் துறைகளிலும் அமைதியையும் சகிப்புத்தன்மையையும் நிலை நாட்ட இந்த ஜமாஅத் தன்னாலான முயற்சிகளை மேற்கொள்கிறது. மார்க்கங்களிடையே நல்லிணக்கம் ஏற்படவும் இந்த ஜமாஅத் பெரிதும் பாடுபடுகிறது.

TAMIL

தற்காலத்தில் நிகழ்ந்து வரும் போர்கள், இஸ்லாத்திற்காகவோ, மார்க்கத்திற்காகவோ நடப்பதில்லை. மாறாக, அவை பொருளாதார அல்லது அரசியல் ரீதியாக நாடுகளைக் கைப்பற்றுவதற்காகவே ஆகும். மேலும், இது இஸ்லாத்தின் பெயருக்கு களங்கம் விளைவிக்கும் ஒரு வழிமுறை என்பதையே நிரூபிக்கின்றது.


**Contact Details:**
Ahmadiyya Muslim Jama'at, India

**Head Office:**
Qadian, Dist. Gurdaspur, Punjab - 143 516.
**www.alislam.org / www.ahmadiyyamuslimjamaat.in**

**Branch Office:**

**Masjid Nasir**
Ashura East Street
Melapalayam - 627 005

**Masjid Mahmood**
11, U.I. Colony, First Main Road
Chennai - 600 024

**Masjidul Mahdi**
Kuniamuthoor
Coimbatore - 641 008



Islam International Publications Ltd.

Published in India in 2019, copies 2000
Published by: Nazarat Nashr-o-Isha'at,
Sadr Anjuman Ahmadiyya Qadian.143516-Punjab,India
Printed in India @ Fazl-e-Umar Printing Press Qadian.

For further information please Visit:
www.alislam.org / www.ahmadiyyamuslimjamaat.in / www.mta.tv
Feedback www.ahmadiyyamuslimjamaat.in/feedback
National Toll Free No. 1800 103 2131 / Tamil : 1800 425 40000

/islaminind /islaminind /+islaminindia /islaminindia /c/ islaminindia
**official blog: www.lightofislam.in**



Muslim Television Ahmadiyya International

Satellite: Asia sat 7s, Degree: 105.5 East, Frequency 3760 Symbol Rate: 26000 FEC: Auto / C.Band 4 Feet Dish Antenna
EutelsatE70B,Degree:70° East,Frequency:11211,SymbolRate:5111,Polarization-HorizontalQPSK-1/2,KU Band 2 feet Dish Antenna